**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OP | 39 | of | 2024 |

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் ம.சா. 1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.பிரபாகரன் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **கீர்த்தனா தேவி** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-16.03.2026**

**ம.சா.-1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

நான் தற்போது இருக்கும் paying guest வீட்டில் குழந்தையை பராமரிக்க முடியுமா என்றால் தனியாக வீடு வைத்திருக்கிறேன் அங்கு வைத்து பராமரிக்க முடியும். அது 3BHK என்பதால் நான் ஒருவர் மட்டும் தங்குவதற்கு paying guest hostel போதுமானது என்பதாலும், நான் பணிபுரியும் நிறுவனத்திற்கு அருகில் இருப்பதாலும் 3BHK வை வாடகைக்கு விட்டிருக்கிறேன். அதன் மாத வாடகை ரூ. 14,500/- ஆகும். அந்த ரூ. 14,500/- தொகையை என்னுடைய வாடகை செலுத்த பயன்படுத்துகிறேன். குழந்தையை பராமரிக்க மாதம் ரூபாய் எவ்வளவு செலவாகிறது என்று தெரியாது. குழந்தைக்கு படிப்பு

செலவு எவ்வளவு ஆகிறது என்று தெரியாது. குழந்தையின் சரியான வயது 10 முடிந்து 11 ஆரம்பிக் கிறது. குழந்தை 6ம்வகுப்பு படிக்கிறாள். குழந்தை என் கணவரின் பராமரிப்பில் சந்தோஷமாக உள்ளது என்றால் சரியல்ல அதை மறுக்கிறேன். குழந்தையுடன் என் கணவர், கணவரின் பெற்றோர் ஆகியோர் உள்ளனர். நான் கு மாதங்கள் ரூ.25 ஆயிரம் வீதம் கொடுத்த பிறகு மேற்கொண்டு தொகை எதுவும் நான் தரவில்லை. எதிர்மனுதாரர் personal loan போட்டு கொடுத்த தொகைக்கு EMI செலுத்த வேண்டி மேற்படி ரூ.25 ஆயிரம் வீதம் 4 மாதங்கள் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் குழந்தைக்காகதான் கொடுத்தேன். நான் தாம்பரம் நீதிமன்றத்தில் போன வருடம் கடைசியாக என் மகளை பார்த்தேன். குழந்தையை பிரிந்தது முதல் 3 முறை மட்டுமே குழந்தையை பார்த்தேன். ஆனால் குழந்தை என்னிடம் பேசவில்லை. எதிர்மனுதாரர் குழந்தையை அவ்வாறு பழக்கியுள்ளார். குழந்தை எதிர்மனுதாரர் உடன் இருந்ததால் என்னிடம் சகஜமாக பேசவில்லை. நான் தனியாக குழந்தையிடம் பேச எதிர்மனுதாரர் விடவில்லை. ஒன்றாக இருந்தபோது நான் குழந்தையை என்னால் பராமரிக்க முடியாது என்று சொல்லிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் வேலை முடித்து இரவு வருவதற்கு நேரம் ஆகிவிடுவதால் குழந்தை எதிர்மனுதாரருடன் இருக்கவே விருப்பப்பட்டது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் குடிகாரர் என்பதற்கு மருத்தவ சான்று இல்லை, ஆனால் குழந்தை துாங்கும் அதே அறையில் அவர் மதுபாட்டில்கள் வைத்திருந்த வீடியோ உள்ளது. அந்த வீடியோவை நான்தான் எடுத்தேன் என்றால் சரிதான்.

குழந்தையின் நலன் முக்கியம் என்றால் சரிதான். குழந்தையின் நலனை நினைத்திருந்தால் நான் இந்த மனு தாக்கல் செய்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. குழந்தை எதிர்மனுதார்ர பராமரிப்பில் சந்தோஷமாக உள்ளது என்றும், குழந்தைதான் என்னிடம் வர மறுக்கிறது என்றும் சொன்னால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரிடம் இருந்து பிரியும் சமயத்தில் குழந்தையின் படிப்பு கெடக்கூடாது என்பதற்காக என் கணவர் வீட்டிற்கு அனுப்பி வைத்தேன். குழந்தையை விட்டு செல்லும்போது வயது 7 ஆகும். எதிர்மனுதாரர் குழந்தையை பொறுப்பாக வளர்த்து வருகிறார் என்றால் சரியல்ல.எதிர்மனுதாரர் அவருடைய பராமரிப்பிற்கே அவருடைய பெற்றோரை நம்பிதான் உள்ளார். நான் ஆண் நண்பருடன் நேரத்தை கழித்ததால் நான்தான் குழந்தையை பராமரிக்க விருப்பப்படவில்லை என்றால் சரியல்ல. நான் ஆண் நண்பருடன் சேர்ந்து வெளியே சென்றதை குழந்தை பார்த்ததாகவும் அதனால்தான் என்னுடன் வர மறுக்கிறது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu